தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஏழாம் வகுப்பு
# தமிழ் அறிவுப்போட்டி 2019

# Year 7

## Tamil Language Skills Competition 2019

# தமிழறிவுப் போட்டி – 2019

## ஆண்டு - 7

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு, அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டு 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

முதல் சுற்று 10 கேள்விகள்

ஆசிரியரால் வாசிக்கப்படும்

1.

ஒற்றுமை என்பதற்கு எதிர்ச்சொல் கூறுக.

1. விடை:

வேற்றுமை

2.

செய்த செயலைக் குறிப்பது இறந்தகாலம்,

செய்கின்ற செயலைக் குறிக்கும் காலத்தை எப்படிக் கூறலாம்?

2. விடை:

நிகழ்காலம்

3.

சிலப்பதிகாரத்தின் கதாநாயகி யார்?

3. விடை:

கண்ணகி

4.

தமிழிலுள்ள இதிகாசங்கள் எவை?

4. விடை:

இராமாயணம்
மகாபாரதம்

5.

முத்தமிழ் எவை?

5. விடை:

இயல், இசை, நாடகம்

(இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்)

6.

பாவேந்தர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

Year 7 - 2019

6. விடை:

பாரதிதாசன்

7.

“ஐம்பொறிகள்” எவை?

7. விடை:

கண், காது, மூக்கு, வாய், உடல்

(அனைத்து விடைகளும் கூறவேண்டும்)

8.

சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

8. விடை:

இளங்கோ அடிகள்

9.

தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும். ஒன்று உயிர் எழுத்து, இன்னொன்று மெய் எழுத்து மற்றய இரண்டையும் கூறுக:

9. விடை:

உயிர்மெய் எழுத்து,
ஆய்த எழுத்து

10.

தமிழ் மாதங்களில் ஒன்று பங்குனி. இதனைத் தொடர்ந்து வரும் மாதத்தை தமிழில் கூறுக:

10. விடை:

சித்திரை

# முதல் சுற்று நிறைவுபெற்றது

# இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11.

மூவேந்தர்களில்
சேரனின் கொடி – விற்கொடி
சோழனின் கொடி – புலிக்கொடி
பாண்டியனின் கொடி எது?

11. விடை:

மீன்கொடி

12.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

இதில் நாலு என்பது நாலடியார்
இரண்டு என்பது என்ன?

12. விடை:

திருக்குறள்

13.

ஐவகை நிலங்களில்

“வயலும் வயல் சார்ந்த நிலமும்”

எதனைக் குறிக்கும்?

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. பாலை
5. நெய்தல்

13. விடை:

**மருதம்**

14.

தமிழ்மொழி வாழ்த்தைப் பாடியவர் யார்?

14. விடை:

பாரதியார்

15.

பிரித்துக் கூறுக:

**அங்குமிங்கும்**

15. விடை:

அங்கும் + இங்கும்

16.

மாமாவும் அப்பாவும் உரையாடினார்கள்

உரையாடினார்கள் என்ற சொல்லுக்கு பொருத்தமான சொல் எது?

1. கதைசொன்னார்கள்
2. கதைகேட்டார்கள்
3. கதைத்தார்கள்

16. விடை

3. கதைத்தார்கள்

17.

பெயர்களைக் குறிக்கும் சொற்களை "**பெயர்ச் சொற்கள்**" என்பர்.
அதேபோல் **செயலைக்** குறிக்கும் சொற்களை எப்படிக் கூறுவர்?

17. விடை:

வினைச் சொற்கள்

18.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்” எனப் பாடியவர் யார்?

18. விடை:

பாரதியார்

19.

திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

19. விடை:

133

(நூற்றி முப்பத்தி மூன்று)

20.

தமிழில் எத்தனை மெய் எழுத்துக்கள் உள்ளன?

20. விடை:

18

இரண்டாம் சுற்று நிறைவுற்றது.

# மூன்றாம் சுற்று 10 கேள்விகள்

# அட்டவணைக் கேள்விகள்

## ஆசிரியர் கேள்விகளை வாசிக்கலாம்

# அட்டவணை கேள்விகள் - சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | | | | | |
| B | | | | | |
| C | | | | | |
| D | | | | | |
| E | | | | | |

# உதாரணக் கேள்வி:

## யானையை இப்படியும் அழைக்கலாம்

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | க | பு | ல் | லை | சா |
| B | ரி | று | அ | த் | தை |
| C | ப | மு | த் | து | ளி |
| D | வி | ம் | கு | ரு | ளை |
| E | வ | ளை | யா | ப | தி |

உதாரணக் கேள்வி:

யானையை இப்படியும் அழைக்கலாம்.

விடை A-1 கரி

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | க | பு | ல் | லை | சா |
| B | ரி | று | அ | த் | தை |
| C | ப | மு | த் | து | ளி |
| D | வி | ம் | கு | ரு | ளை |
| E | வ | ளை | யா | ப | தி |

# 21. உடலில் முக்கிய உறுப்பு

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நு | ஏ | லா | நு |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | உள | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

21. விடை:

A 1

இதயம்

22. வீட்டினுள் வெளிச்சம் வர உதவுவது இது.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நு | ஏ | லா | நு |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | உள | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

22. விடை:

C 1

யன்னல்

# 23. முகவரியை வேறு எப்படி கூறலாம்?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நூ | ஏ | லா | நூ |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | உள | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

23. விடை:

A 5

விலாசம்

# 24. பாடலை இப்படியும் சொல்லலாம்.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நூ | ஏ | லா | நூ |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | உள | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

24. விடை:

D 2 கீதம்

# 25. விளையாடும் இடம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நூ | ஏ | லா | நூ |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | உள | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

25. விடை:

F 1 மைதானம்

26. Library என்பதன் தமிழ்ப் பதம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | இ | த | ய | ம் | வி | லை |
| B | ணை | நெ | நூ | ஏ | லா | நூ |
| C | ய | ன் | ன | ல் | ச | ல |
| D | ம் | கீ | த | ம் | ம் | க |
| E | ஊ | ட | க | ம் | நா | ம் |
| F | மை | தா | ன | ம் | ப | சு |

26. விடை:

B 6 நூலகம்

27.

குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

| | | | |
|---|---|---|---|
| வி | ரு | ழா | தி |

27. விடை:

திருவிழா

28.

இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கசப்பு ஆகியன...

1. ஐம்பொறிகள் எனப்படும்
2. அறுகுணங்கள் எனப்படும்
3. அறுசுவைகள் எனப்படும்

28. விடை

3. **அறுசுவைகள் எனப்படும்**

29.

**எழுதுகிறான்** என்பது நிகழ்காலம்.

இதனை இறந்தகாலத்தில் எப்படிக் கூறலாம்?

29. விடை:

எழுதினான்

30.

ஒத்த சொல் தருக?

**பரம்பரை**

30. விடை:

சந்ததி

# மூன்றாம் சுற்று நிறைவுற்றது

# இறுதிப் போட்டி
# 15 கேள்விகள்

1.

திருக்குறளை முடியுங்கள்.

“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

____________ ____________ ____________”

1. விடை:

அன்றே மறப்பது நன்று

2.

ஒரு புதிய கலைப் படைப்பைப் பார்வையாளர்களின் முன், முதல் முறையாக அளிக்கும் நிகழ்ச்சியை எப்படி அழைப்பர்?

1. ஒத்திகை
2. அரங்கேற்றம்

Year 7 - 2019

2. விடை:

   2. அரங்கேற்றம்

3.

ஐவகை நிலங்களில் குறிஞ்சி என்பது எதனைக் குறித்து நிற்கிறது?

3. விடை:

மலையும், மலைசார்ந்த நிலத்தினையும்

4.

வடிவு என்பதன் ஒத்தசொல் என்ன?

4. விடை:

அழகு

5.

ஆடு கத்துவது போல

மயில் ________________

5. விடை:

அகவும்

6. தலைமுறை தலைமுறையாக நமது முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை இப்படி அழைப்போம்.

6. விடை

பூர்வீகம்

7.

ஔவையார் இயற்றிய நூல்களுள் ஒன்று "ஆத்திசூடி" மற்றைய மூன்று நூல்களைக் கூறுக.

7. விடை

1. கொன்றை வேந்தன்
2. மூதுரை
3. நல்வழி

(மூன்று விடையும் சரியாக கூறாவிட்டால் 5 புள்ளிகள் கழிக்கப்படும்)

8.

ஆரவாரம் என்ற சொல்லின் எதிர்ப்பொருள் எது?

8. விடை:

அமைதி

9. ஈழத்து அரசன் யார்?

. இராசராச சோழன்

. பண்டார வன்னியன்

9. விடை

**பண்டார வன்னியன்**

10. இது யாருடைய சி



10. விடை:

திருவள்ளுவர்

11

இந்த எண்களை தமிழில் கூறுக

800

900

11 விடை

800 – எண்ணூறு

900 – தொள்ளாயிரம்

12.

தமிழ் மறை எனப்படுவது எந்த நூலைக் குறிக்கும்?

12. விடை

திருக்குறள்

13.

“வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே”

இந்தப்பாடலை எப்படி அழைப்பது?

1. கல்லூரி கீதம்
2. தமிழ்ப்பாடல்
3. தமிழ்மொழி வாழ்த்து

13. விடை:

3. தமிழ்மொழி வாழ்த்து

14.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"

என்று பாடியவர் யார்?

## 14. விடை

மகாகவி பாரதியார்

15.

நமக்குக் கிடைத்த தமிழிலக்கண நூல்களுள்ளே காலத்தால் முந்தியது எது?

Year 7 - 2019

15. விடை:

தொல்காப்பியம்

இறுதிச்சுற்று
நிறைவுபெற்றது
நன்றி

மேலதிக கேள்வி தேவைப்பட்டால்
மட்டும் பாவிக்கவும்

1.

இவர் இந்திய நாட்டின் தந்தை எனப் போற்றப்படுபவர். இவர் எளிமையாக வாழ்ந்தார். இவர் யார்?

1 விடை:

மகாத்மா காந்தி

காந்தித் தாத்தா

2.

பாரதி எங்கே பிறந்தார்?

2. விடை

எட்டயபுரத்தில்

3.

எமது தமிழ்ப் பாடசாலையின் கீதத்தை இயற்றிய ஆசிரியர் யார்?

3. விடை

ஆசிரியர் திரு.ச.தேவராசா